வீடமைப்பு ஆணையாளர் திணைக்களம்

## மேல் மாகாணம்

# பிரஜைகள் சாசனம்

# “ நீங்கள் இப்போது உங்களுக்கு சேவை வழங்க தயாராக இருக்கும் இடத்திற்கு நுழைகிறீர்கள்”

எமது நோக்கம்

" மேல் மாகாணத்தில் வசிக்கும்
அனைத்து குறைந்த வருமானம் கொண்ட குடும்ப அலகுகளுக்கு
வசிப்பதற்கு நிரந்தர வீடு "

*எங்கள் பணி*

*“மேல் மாகாணத்தின் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக*

*பொருத்தமான வீட்டைக் கட்டுவதற்கும், இருக்கும் வீட்டை மேம்படுத்துவதற்கும்*

*உதவி மானியம் வழங்குதல் மற்றும் 1972 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கம் வீட்டு*

*வாடகை சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி நிவாரணம் வழங்குதல்”*

**எங்கள் சேவை,**

- **நேர்மையாக,**
- **புத்திசாலித்தனமாக**
- **பணிவாக**
- **புரிந்துணர்வுடன்**
- **பாரபட்சமின்றி**
- **வெளிப்படையாக**
- **பொறுப்புக்கூறலுடன்**
- **உடனடியாக**
- **வினைத்திறன் மற்றும் திறமையாக**

**வழங்குவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.**

# வீடமைப்பு ஆணையாளர் திணைக்களம் (மே.மா)

| வழங்கப்படும் சேவை | சேவை வழங்கல் தரநிலைகள் (மணி/வாரம் / நாட்கள் | சமர்ப்பிக்க வேண்டிய தகவல்/ஆவணங்கள் | தொடர்புடைய சட்டங்கள், கோவைகள், ஒழுங்கு முறைகள் போன்றவை | உங்களுக்கு உதவக்கூடிய (அதிகாரியின் பெயர், பதவி, இடம், தொலைபேசி/தொலைநகல்/ மின்னஞ்சல்) |
|---|---|---|---|---|
| 1972 இன் 7 ஆம் இலக்க வீ. வா.ச. 18 அ பிரிவின் கீழ் வாடகையாளர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட குடியிருப்பு அல்லது வணிக நோக்கங்களுக் காகப் பயன்படுத்தப்படும் 40 ஆண்டுகளுக்கும் மேலான பழைய கட்டடத்தை இடித்து மறுகட்டமைக்க அனுமதி வழங்குவது தொடர்பான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது | 5 நிமிடம் | ❖ **விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள்**<br>➢ உரிய சொத்தின் உரிமையை நிரூபிக்க தொடர்புடைய உறுதி/நிலத் திட்டம்,<br>➢ சம்பந்தப்பட்ட கட்டடம் 40 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என்பதை உறுதி செய்வதற்கான தொடர்புடைய ஆவணங்கள்,<br>➢ விண்ணப்பதாரரிடம் புதிய கட்டடம் கட்டுவதற்கான நிதி உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்,<br>➢ மறுவடிவமைப்புத் உத்தேசதிட்டம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கட்டடத் திட்டம், செலவு மதிப்பீடு மற்றும் அளவு கணக்கெடுப்புப் பட்டியல் | *1972 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கம் வீட்டு வாடகை சட்டம்* மற்றும் 1980 மற்றும் 2002 திருத்தச் சட்டங்கள் | டப்ளியு.எம்.பாக்கியா லக்மாலி வீர சிங்ஹ<br>வீடமைப்பு ஆணையாளர் ,<br>தொ. இலக்கம்: 011-2092730<br>பக்ஸ் : 011-2092757<br>வீடமைப்பு ஆணையாளர் திணைக்களம் (மே.மா) |
| 1972 இன் 7 ஆம் இலக்க வீ. வா.சட்டத்தின் 22(1) மற்றும் 22(2) ஆகிய பிரிவுகளின் கீழ், மாதாந்த நிலையான வாடகை ரூ.100/-க்கு குறைவான, ரூ.100/-க்கு அதிகமான | 30 நிமிடங்கள் | ➢ மாதாந்த நிலையான வீட்டு வாடகை நிர்ணயிக்கப்பட்ட ஆவண | *1972 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கம் வீட்டு வாடகை சட்டம்* மற்றும் 1980 மற்றும் 2002 திருத்தச் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| இடத்தில் வாடகைதாரரை வெளியேற்றுவதற்கான, வழக்கு நடவடிக்கைகளுக்குரிய பண வைப்பை ஏற்றுக் கொள்வது. | | | சட்டங்கள் | |
| வழங்கப்படும் சேவை | சேவை வழங்கல் தரநிலைகள் (மணி/வாரம் / நாட்கள் | சமர்ப்பிக்க வேண்டிய தகவல்/ஆவணங்கள் | தொடர்புடைய சட்டங்கள், கோவைகள், ஒழுங்கு முறைகள் போன்றவை | உங்களுக்கு உதவக்கூடிய (அதிகாரியின் பெயர், பதவி, இடம், தொலைபேசி/தொலைநகல்/ மின்னஞ்சல்) |
| பிரதேசத்தில் உள்ள வீட்டு உரிமையாளர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே நிலவும் பிரச்சனைகளை தீர்த்து வைத்தல் | 30 நாட்கள் | ➢ சம்பந்தப்பட்ட வீட்டு வாடகை சபையிடமிருந்து விண்ணப்பத்தைப் பெறுதல் மற்றும்<br>➢ வீட்டு வாடகை சபையின் நிர்ணயிக்கப்பட்ட தொகையை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு | 1972 இன் 7 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டம் மற்றும் 1980 இன் 55 மற்றும் 2002 இன் 26 ஆம் இலக்க திருத்தம் | வீ.வா.ச.செயலாளர் - கொழும்பு 1, 2, ஶ்ரீஜயவர்தனபுர கோட்டை, தெஹிவளை, மொரட்டுவ, மஹரகம, பத்தரமுல்ல, அவிசாவளை, கம்பஹா, நீர்கொழும்பு, வெயங்கொடை ,பேலியகொடை, களுத்துறை, பாணந்துறை வீட்டு வாடகைச் சபைகள் |
| குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவிகளை வழங்குதல் . | பயனாளிகளால் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து 03 நாட்களுக்குள் | **வீடமைப்பு வசதி உதவி பெற, முதலில் கோரிக்கை கடிதம் சமர்ப்பித்து விண்ணப்பம் பெற வேண்டும் விண்ணப்பத்துடன்**<br>➢ காணியின் உரிமையை உறுதி செய்வதற்காக உறுதியின் பிரதி.<br>➢ தமக்கு சொந்தம் இல்லாத காணியாயின் உரிமையாளரினால் வீடு கட்டுவதற்கு அனுமதி அளிக்கும் கடிதம்<br>➢ காணியின் உரிமையாளர் இறந்துவிட்டால், துணையினால் திருமணச் சான்றிதழின் பிரதி, இறப்புச் சான்றிதழின் | 1990 இன் 03 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நியதிச்சட்டம் மற்றும் வர்த்தமானி அறிவிப்பு | டப்ளியு.எம்.பாக்கியா லக்மாலி வீர சிங்ஹ<br>வீடமைப்பு ஆணையாளர் ,<br>தொ. இலக்கம்: 011-2092730<br>தொலை நகல் : 011-2092757<br>வீடமைப்பு ஆணையாளர் திணைக்களம் (மே.மா) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரதி, பிள்ளைகளின் பிறப்பு சான்றிதழ்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.<br>➢ மாத வருமானம் ரூ:8000/-க்கு குறைவாக இருக்க வேண்டும்.<br>➢ ஒரு செலவு மதிப்பீடு | | |

**எங்களது எதிர்பார்ப்பு**

எங்கள் நிறுவனத்தின் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்,எங்கள் சேவைகளுக்கான உங்கள் கோரிக்கைகளை நியாயமான மற்றும் சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதன் மூலமும், முழுமையான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதன் மூலமும், எங்களிடமிருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கலாம் மற்றும் எதிர்பார்க்க முடியாது என்பதைப் பற்றிய போதுமான புரிதலைப் பெறுவதன் மூலமும் நீங்கள் எங்களுக்கு ஆதரவளிக்க முடியும் என்பதை நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

**எங்களது தரநிலைகள்**

உங்களினது எழுத்து மூலமான அனைத்து கோரிக்கைகளுக்கும் நாங்கள் உடனடியாக பதிலளிப்போம். 07 நாட்களுக்குள் எங்கள் பதிலைப் பெறுவீர்கள்.

கோரப்பட்ட தகவல், எழுதப்பட்ட ஆவணங்கள் மற்றும் கட்டணங்கள் உங்கள் கோரிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டால், எங்களால் அறிவிக்கப்பட்ட கால எல்லைக்குள் வேண்டுகோள்விடுக்கப்பட்ட சேவையை உங்களுக்கு வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இறுதி முடிவு தாமதமாகலாம் அல்லது கட்டாயமாக தாமதமாகலாம் அல்லது சிக்கல் சூழ்நிலை ஏற்படும் போது, அதற்கான காரணத்தை உடனடியாக உங்களுக்குத் தெரிவிப்போம்.

**முறைப்பாடுகள் மற்றும் சலுகை வழங்கும் நடைமுறைகள்**

எங்கள் நிறுவனத்தின் பணியாளர்கள் உங்களுக்கு மரியாதையான, தேவையான உதவி மற்றும் சேவைகளை வழங்குவார்கள். மேலே குறிப்பிட்டுள்ள தரநிலைகள் தொடர்பான உங்கள் முறைப்பாடுகளை பின்வரும் அலுவலகரிடம் பதிவு செய்யவும்.
பெயர் : டப்ளியு.எம்.பாக்கியா லக்மாலி வீர சிங்ஹ

பதவி : வீடமைப்பு ஆணையாளர்
அமைந்துள்ள இடம் : வீடமைப்பு ஆணையாளர் திணைக்களம், (மே.மா), மாகாண சபை கட்டடம்
இலக்கம்: 204, டென்சில் கொப்பகடுவ மாவத்தை, பத்தரமுல்ல
தொலைபேசி: 011-2092730
தொலை நகல் : 011-2092757

- அனைத்து முறைப்பாடுகளும் கிடைத்ததாக 03 நாட்களுக்குள் அறிவிக்கப்படும் மற்றும் இறுதி பதில் 07 நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.
- சேவைபெறுநர்களாகிய உங்களிடமிருந்து முன்வைக்கப்படும் பிரேரணைகளை நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம்.

- உங்களுடனோ அல்லது உங்கள் பிரதிநிதிகளுடனோ எங்களின் தொடர்ச்சியான சந்திப்புகள் நடாத்துவோம். நீங்கள் எங்களை தொடர்பு கொள்ள விரும்பினால், தயவுசெய்து 011-2092730க்கு அழைக்கவும்.
- இந்த சாசனத்தில் சேர்க்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக உங்கள் ஆலோசனை அல்லது உங்கள் கருத்துக்களை வழங்க உங்களுக்குள்ள விருப்பம் உள்ளடங்கலாக உங்கள் விவரங்களை எங்கள் www.depthc.wp.gov.lk இணையதளம் அல்லது எங்கள் மின்னஞ்சலை உள்ளிடவும்

இல்லாவிட்டால் எங்களது மின்னஞ்சல் www.housingcommissionerwp@gmail.com இற்கு அனுப்பவும்.

பிரஜைகள் சாசனம் என்பது நாங்கள் வழங்கும் சேவைகளின் தரத்தை மேம்படுத்த உங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான கூட்டு முயற்சியாகும். வழங்கப்படும் சேவையை மேலும் மேம்படுத்த உங்கள் ஆதரவை நாங்கள் கோருகிறோம்.

**சாசனத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளை தொடர்ந்து திருத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்....!**